வேலூர் மாவட்டம், ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி
கூடுதல் முதன்மைக் கல்வி அலுவலர் அவர்களின் செயல்முறைகள்

ந.க..எண். 1378 /மாஒ2/ஒபக/2022, நாள்.26.10.2022

பொருள் : வேலூர் மாவட்டம் – ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி – அரசு உயர்நிலை / மேல்நிலை / நடுநிலைப் பள்ளிகளில் பணிபுரியும் பகுதி நேரப் பயிற்றுநர்கள் – விவரம் EMIS இணையதளத்தில் பதிவேற்றம் (PTI Profile - Updation) செய்தல் – சார்பாக.

பார்வை : மாநிலத் திட்ட இயக்குநர், ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி, சென்னை–6 அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.4441/அ3/பணி/ஒபக/2022, நாள். 20.10.2022.

*********

பார்வையில் காணும் கடிதத்தில், அரசு உயர்நிலை / மேல்நிலை / நடுநிலைப் பள்ளிகளில் பணிபுரியும் பகுதி நேரப் பயிற்றுநர்களின் விவரங்களை EMIS இணையதளத்தில் 30.09.2022 நிலவரப்படி சரியாக உள்ளதா என உறுதி செய்து, அவ்விவரங்களை EMIS இணையதளத்தில் கீழ்கண்ட விவரங்களில் தனிகவனம் செலுத்தி சரிபார்த்து 28.10.2022–க்குள் பதிவேற்றம் செய்திட தெரிவிக்கப்பட்டுள்ளது.

1. பெயர்
2. பாலினம்
3. பிறந்த தேதி
4. பாடம்
5. தற்போது பணிபுரியும் பள்ளி
6. முதன் முதலில் பணியில் சேர்ந்த நாள்
7. தற்போது பணிபுரியும் பள்ளியில் சேர்ந்த நாள்
8. மாற்றுத்திறனாளி – விவரம்

எனவே, அனைத்து பகுதி நேரப் பயிற்றுநர்களின் விவரங்கள் 30.09.2022 நிலவரப்படி EMIS இணையதளத்தில் சரியாக உள்ளதா என உறுதி செய்து, EMIS இணையதளத்தில் 27.10.2022–க்குள் பதிவேற்றம் செய்து, அவ்விவரங்களை முகப்பு கடிதத்துடன் மாவட்டத் திட்ட அலுவலகத்திற்கு 28.10.2022–க்குள் அனுப்பிவைக்க அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள், வட்டாரக் கல்வி அலுவலர்கள், (பொ) மேற்பார்வையாளர்கள் மற்றும் பள்ளித் தலைமையாசிரியர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

மேலும் தொடர் விடுமுறையில் உள்ள பகுதி நேரப் பயிற்றுநர்கள் விவரங்கள் இத்துடன் இணைத்து அனுப்பிவைக்குமாறும் தெரிவிக்கப்படுகிறது.

for 26/10/22
கூடுதல் முதன்மைக் கல்வி அலுவலர்,
ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி,
26/10/2022 வேலூர் மாவட்டம்.

இணைப்பு – பார்வையில் காணும் கடிதம் நகல்.

பெறுநர் –

1. மாவட்டக் கல்வி அலுவலர் (இடை நிலை), வேலூர்.
2. மாவட்டக் கல்வி அலுவலர் (தொடக்கக் கல்வி), வேலூர்.
3. அனைத்து அரசு நடுநிலை/உயர்நிலை/மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்கள், வேலூர் மாவட்டம். (உரிய வழியாக)
4. அனைத்து வட்டார வளமைய மேற்பார்வையாளர்கள் (பொ), வேலூர் மாவட்டம்.
5. அனைத்து வட்டாரக் கல்வி அலுவலர்கள், வேலூர் மாவட்டம்.

நகல் – மாநிலத் திட்ட இயக்குநர், ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி, சென்னை–6 அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது.

நகல் – முதன்மைக் கல்வி அலுவலர், வேலூர் – அவர்களுக்கு கனிவுடன் அனுப்பலாகிறது.